பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்
New Eelam Jewellery Mart
No. 423, (247) K.K.S. Road
Sivan Koviladdy, Jaffna.
(சண்முகம் தேனீர்ச் சாலைக்கு அருகாமையில்)
Prop: RAJAKOPAL CHANDRAN

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்!
நியூ ஈழம் ஜுவலரி மாட்
(இல 423 247)
கே. கே. எஸ் வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு சித்திரை மீ 05 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 29 (17-04-1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 55

# யாழ். பாடசாலைகள் புதனன்று ஆரம்பம்

## வடமராட்சியில் நாளை

— அலுவலகச் செய்தியாளர்: சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக, முன்னர் அறிவிக்கப்பட்டது போல மே மாதம் இரண்டாம் திகதி அல்லாமல், அதற்கு முன்னதாக எதிர்வரும் புதன்கிழமை (20 ஆம் திகதி) திறக்கப்பட உள்ளன.

இதற்கான உத்தரவை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் நேற்று விடுத்தார்.

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை.

இதனால் பாடத் திட்டமும் ஒழுங்காக முடிக்கப்படவில்லை.

இதே வேளை எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் நடைபெற இருக்கும் விசேட ஜீ. சி. ஈ. பரீட்சை நடைபெறும் போதும் பாடசாலைகளை மூடவேண்டி வரும்.

இவற்றைக் கருத்திற் கொண்டே பாடசாலைகளை திட்டமிட்டதற்கு முன்னதாக ஆரம்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம் மன்சூர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முதலாம் தவணையை முடித்துக் கொண்ட சகல பாடசாலைகளும் எதிர் வரும் 20 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவேண்டும்

ஆனால் ஒரு சில பாடசாலைகள் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை தமது முதலாம் தவணையை நீடித்திருந்தன.

இவை தமது பாடசாலைகளை இரண்டாம் தவணைக்காக மே மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கலாம்.

ஆனால் வடமராட்சிப் பாடசாலைகள் அனைத்தும் நாளை ஆரம்பிக்கப்படவேண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மன்சூருக்கு திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 17

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூருக்கு திடீர் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது.

இந்த உத்தரவு கொழும்பில் இருந்து தொலைபேசி மூலம் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக பணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாப் மன்சூர் கல்வி அமைச்சுக்கு இடமாற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

ஜீ. சி. ஈ. விசேடபரீட்சை:

## 21 ஆயிரம் மாணவர் பரீட்சைக்குத் தோற்றுவர்

கொழும்பு, ஏப். 17

யாழ். மாவட்டத்தில் ஜூலை 2 முதல் 9 வரை நடைபெறவுள்ள ஜீ சி.ஈ சாதாரண தர விசேட பரீட்சைக்கு சுமார் 21 ஆயிரம் மாணவர் தோற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் ஸ்டேர்லிங் பெரேரா தெரிவித்தார்.

விசேட பரீட்சை சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும் அதிகாரம் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம், எம். மன்சூருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்படிப் பரீட்சை ஆணையாளர் மேலும் சொன்னார்.

விஞாத்தாள்கள் அச்சிடப்படுவது, அவற்றைக் கொண்டு செல்வது பற்றிய தகவல்களை வெளியிட மறுத்த பரீட்சை ஆணையாளர்,

"அது சம்பந்தமான பணி ஆரம்பமாகி விட்டது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பூரணமான பரீட்சை ஒன்றுக்குத் தோற்றமுடியும் என்ற உத்தரவாதத்தை அளிக்கின்றேன்"- என்று தெரிவித்தார் (இ-எ)

வன்முறையைக் கைவிடும் வரை

## ஜே. வி. பியுடன் எந்தவித தொடர்பும் அரசாங்கம் வைக்காது

கொழும்பு, ஏப். 17

வன்முறையைக் கைவிடும் வரை ஜே வி பி. யுடன் எவ்வித தொடர்பையும் அரசு வைத்துக் கொள்ளாது.

ஜனாதிபதி ஜெயவர்தன முன்கண்டவாறு சொன்னார்.

வெலிமடையில் நேற்று நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பேசினார்.

மாகாணசபை மூலமான அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை இன்று சுதந்திரக் கட்சியும் ஜே. வி. பி. யுமே எதிர்க்கின்றன.

ஒன்பது மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டே தீரும். இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். [இ-எ]

### சுபநேரம்

17-04-1988
சித்திரை 05
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.03 முதல் 10.33 வரை
ராகுகாலம்:
4.33முதல் 6.03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

முச்சந்திமுரளி



அப்ப வாத்திமார் லீவுக்குப் போட்ட வீட்டுத் திட்டங்கள் எல்லாம் பாழாய்ப் போச்சே...!

# சிறையிலுள்ள தமிழ் இளைஞர் மீண்டும் உண்ணாவிரதம் இருப்பர்

— கொழும்பிலிருந்து எஸ் ஈ நாதன் —

கொழும்பு, ஏப் 17

சிறையில் உள்ள தமிழ் இளைஞர்கள் தங்கள் விடுதலையை வலியுறுத்தி மீண்டும் சாகும் வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்க உள்ளனர் என்று தெரிகிறது.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் முதலில் கொழும்புச் சிறைகளில் ஆரம்பமாகி பின்னர் மற்றைய சிறைச்சாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று தெரிகிறது.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின்படி இவர்கள் பல மாதங்களுக்கு முன்னரே விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இவர்கள் தங்கள் விடுதலையை வலியுறுத்தி கடந்த மாதம் மேற்கொண்ட உண்ணாவிரதம் அரசாங்கம் அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்து கைவிடப்பட்டதும் பின்பு அரசாங்கம் தனது உறுதிமொழியில் இருந்து பின்வாங்கியதும் தெரிந்ததையே.

இதேவேளை இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் பொதுமன்னிப்பு அளித்து தம்மை விடுதலை செய்யுமாறு 855 தமிழ் அரசியல் கைதிகள் சத்தியக் கடதாசிகளை சட்டத்தரணி திரு குமார் பொன்னம்பலம் ஊடாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தனர் என்பது தெரிந்ததே.

855 அரசியல் கைதிகளின் விபரம் வருமாறு:

புளொட் - 185, ஈ பி. ஆர். எல். எவ் - 155, ரெலோ - 74 ஈரோஸ் - 72, தமிழீழ விடுதலைப் புலிகள் - 59. ஏனைய அமைப்புகள் - 46. இயக்கங்களைச் சேராதோர் 264 [இ-3-21]

யாழ். ஆஸ்பத்திரி:

## பார்வையாளர்களுக்கு புதிய நடைமுறைகள்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடும் பார்வையாளர்கள் வெளிநோயாளர் பிரிவு ஊடாகவே உட்செல்ல வேண்டும்.

தினமும் குறிக்கப்பட்ட நேரங்களைத்தவிர ஏனைய நேரங்களில் பார்வையாளர்கள் உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இப்புதிய நடைமுறைகளை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது

தினமும் காலை ஆறு மணி முதல் ஏழு மணி வரையும், நண்பகல் 12

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்க உறவுநிலைகளில் மாற்றம் எதுவும் இல்லை

ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 17

எமக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள உறவில் விரிசல்களோ அல்லது மாற்றங்களோ ஏற்படவில்லை

அதேபோல் எமக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினருக்கும் இடையில் இணக்கம் ஏதும் ஏற்படவுமில்லை.

இவ்வாறு ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறான சில செய்திகள் இந்தியப் பத்திரிகைகளிலும், பி பி சி ஒலிபரப்பிலும் வெளியாகி உள்ளன

இந்தச்செய்திகளை எமது இயக்கம் முற்றுமுழுதாக மறுக்கிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

### சுரண்டல் சுவீப் விற்பனை இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம் ஏப் 17

யாழ்ப்பாணத்தில் சுரண்டல் சுவீப் ரிக்கெட் விற்பனை செய்யப்படுவது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இளைஞர் கோஷ்டி ஒன்றின் வேண்டுகோளை அடுத்தே சுரண்டல் ரிக்கெட் விற்பனை இடைநிறுத்தப்பட்டதாக அறியப்படுகிறது (ஓ எ)

### நோன்புக்காக ஊரடங்கு தளர்வு

செல்லை. ஏப். 17

ரமழான் நோன்புக்காக திருகோணமலை மாவட்டத்தில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணியில் இருந்து நான்கு மணித்தியாலங்கள் தளர்த்தப்படும்.

ரமழான் நோன்பு நாளை ஆரம்பமாகி அடுத்த மாதம் 18 ஆம் திகதி முடிவடையும். (இ எ)

# இந்தியத் தூதர் டிக்ஸிற் இடமாற்றம் செய்யப்படுவார்?

— உதயனின் கொழும்பு, சென்னைப் பிரதிநிதிகள் —

கொழும்பு, ஏப். 17

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே என் டிக்ஸிற் விரைவில் இடமாற்றம் செய்யப்படலாம் என நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக இப்பதவியை வகித்து வரும் திரு. டிக்ஸிற் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் காரணகர்த்தாக்களில் ஒருவராவார்,

முன்னர் ஈழத் தமிழர்களுக்கு மிகவும் ஆதரவாகக் காணப்பட்ட இவரின் அண்மைக்காலப் போக்குப் நடவடிக்கைகளும் இவருக்கு தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பைச் சம்பாதித்துக் கொடுத்துள்ளதாகக் கொழும்பில் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்

திரு. டிக்ஸிற்றும் தாம் இங்கிருந்து மாற்றலாகிச் செல்வதை உள்ளூர விரும்புவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இதே வேளை சென்னையில் உள்ள உதயனின் சிறப்புப் பிரதிநிதி இம் மாதம் ஏழாம் திகதியிட்டு அனுப்பிய செய்தியில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு ஜே என். டிக்ஸிற் இடமாற்றம் செய்யப்படுவது அநேகமாக உறுதியாகி விட்டது. அவர் தமது குடும்பத்தவரையும் ஏனைய மூடை முடிச்சுக்களையும் புதுடில்லிக்கு அனுப்பிவிட்டதாக இங்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

புதிய தூதுவராக யாரை நியமிப்பது என்பது குறித்து இன்னமும் முடிவாகவில்லை என்றும் அதனாலேயே திரு டிக்ஸிற்றின் இடமாற்றம் உடனடியாக அமுலாகவில்லை என்றும் இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-உ-3)

## ஹொரவப்பொத்தானை பகுதியில் ஊர்காவலர் மீண்டும் சேவையில்!

கொழும்பு, ஏப் 17

ஹொரவப்பொத்தானைப் பகுதியில் கூடுதல் ஊர்காவல் படையினர் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து சேவையில் இருந்து விலக்கப்பட்ட ஊர்காவல் படையினருக்கு இப்போது மீண்டும் ஆயுதங்கள் வழங்கப்பட்டு சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் பொலீஸ் உயர் வட்டாரங்களில் இருந்து இது தெரிய வந்துள்ளது.

ஹொரவபொத்தானைப் பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஸ்ரீலங்காத் துருப்புக்களினதும் ஊர்காவல் படையினரினதும் எண்ணிக்கையைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிட முடியாது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹொரவப்பொத்தானை பகுதியில் நடமாடும் புதுமுகங்கள் குறித்துக் கவனமாகக் கண்காணிக்கும்படி ஊர்காவல் படையினர் பணிக்கப்பட்டுள்ளனர் என்று அனுராதபுரம் பொலீஸ் அதிபர் விக்டர் பெரேரா சொன்னார். (ஒ-எ)

(ஒ-9)

## தமிழர் அமைப்புகளுடன் பேச்சு நடத்த 'பதி'குழு சென்னைக்குச் சென்றது

கொழும்பு ஏப் 17

தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்களை நடத்த முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தலைமையில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணித் தூதுக்குழு ஒன்று சென்னை சென்றது.

விசா கிடைக்கத் தாமதமானதால் இத்தூதுக்குழுவின் சென்னைப் பயணம் முன்னர் தடைப்பட்டிருந்தது.

புதுடில்லியில் இருந்து அங்கீகாரம் தாமதமாகக் கிடைத்ததைத் தொடர்ந்து தூதுக்குழு சென்னை பயணமானது.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி புதிதாக அமைக்கப்பட்ட ஸ்தாபனம்.

இத்தூதுக் குழுவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு முக்கிய பங்கு வழங்கப்பட வேண்டும்

முஸ்லிம் பிரமுகர் மொஹிதீன்

கொழும்பு, ஏப்.17

வடக்கு, கிழக்கு இடைக்கால நிர்வாகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆட்சி நடத்தக்கூடிய பங்கு அளிக்கப்படவேண்டும்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ஜனாப். எம். ஐ எம் மொஹிதீன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிரஸ்தாப முன்னணியின் தூதுக்குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றது.

அதற்கு முன்னர் கொழும்பில் 'இந்து' செய்தியாளருக்கு ஜனாப் மொஹிதீன் பேட்டி அளித்தார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் சொன்னதாவது:

அமைதி ஒப்பந்தத்தை எமது முன்னணி ஆதரிக்கின்றது.

இலங்கை முஸ்லிம்கள் பாதுகாப்பாக வாழவேண்டுமானால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டாக வேண்டும் என்று எமது

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ் சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

அல்சேசன் நாய் பழைய கத்துவிளக்கு ஒடு 1000 விற்பனைக்கு உண்டு விபரம் No 9 மார்ட்டின் லேன், யாழ்ப்பாணம். (2573)

நீராவியடி கடையிற் சுவாமி வீதியில் 4½ பரப்பு காணி கிணற்றுடனும் வீட்டுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 217/1 கடையிற் சுவாமி வீதி, நீராவியடி. (2580)

பைண்ட் செய்யப்பட்ட பல ஆண்டுகளுக்கான கலை மைடம் சஞ்சிகைகள், அறிவுக்கேற்ற ஆங்கில சிறுவர் புத்தகங்கள், கதைப்புத்தகங்கள் மற்றும் பல பத்தகங்கள் விற்பனைக்குண்டு. 121, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (2804)

கொன்கிறீட் மின் கம்பங்கள் அலுமினியம் மின்கடத்திகள் 7/096, 7/134, 7/110 ஆகியவையும் இதர மின்பொருள்களும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள அம்பாள் அசோசியேட்ஸ், நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். (2537)

இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சி அடையக்கூடிய (Lohmann) சேவல் குஞ்சுகள் [20-4-88] புதன்கிழமை விநியோகிக்கப்படும் விலை ரூபா 4.00- முன் கூட்டியே பதிவு செய்க. இல -9 குமாரவத்தை (ஒருட்டு சந்தையா லேன்) சுன்னாகம் [ஸ்டேஷனுக்கு அண்மையில்] (2539)

புறொயிலர் குஞ்சுகள் BROILER CHICKS பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (2472)

Uplands Farm இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சி அடைய கூடிய (Lohman) சேவல் குஞ்சுகள் [20-04-88] புதன் கிழமை விநியோகிக்கப்படும் விலை ரூபா 4.00 முன் கூட்டியே பதிவு செய்க. இல -9 குமாரவத்தை ஒருட்டு (கந்தையா லேன்) சுன்னாகம் [ஸ்டேஷனுக்கு அண்மையில்] (2539)

புதிய National Panasonic 320 Watts டெக் சௌ பாடல்கள் ஒலிப்பதிவு செய்யக்கூடியது தொடர்பு வ. சரவணபவன் (பவான்) மரியம்மன் கோயிலடி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (2555)

## சேவை

Winto Tailors 6, நவீன சந்தை (மேல்மாடி மகசன் வங்கிக்கு அருகே) யாழ்ப்பாணம் நவநாகரிக நங்கையர்க்கு நதியா Frock, Bra Cut பிளவுஸ் மற்றும் பாடசாலைச் சீருடைகள் நவீனமுறையில் குறித்த தவணையில் தைத்துப் பெற்றுக் கொள்ள நவீன சந்தையில் ஓரேஒரு ஸ்தாபனம் "வின்ரோ" இன்றே தொடர்பு கொள்ளுங்கள். (2559)

## கமிசனுக்கு

நல்ல நிலையில் உள்ள 'பேக்கரி' உடன் சொமிசனுக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு T விஜயசிங்கம் தலைபாளிப் பாபதிலதி, கொக்குவில் (2568)

## தேவை

ஆங்கிலம், தமிழ் ரைப்பிங் செய்யக் கூடிய ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் தேவை. அச்சகம் பற்றிய அறிவு மாநகர எல்லைக்குள் வாழ்தல் இவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு கமத்தி அச்சகம் 4/4/2 அஸ்பத்திரிவீதி, (டிலகா பேல் மாடி) யாழ்ப்பாணம். (2457 A)

பூ, காய்கறி, மரம், செடி, கொடி, புல் பூண்டு, விதைகள், நாற்றுக்கன்றுகள் வழங்க விரும்புவோர்; இனம் வகை விலைகளுடன் கடிதமூலம் தொடர்பு கொள்க. S சுப்பிரமணியம் TROPIC GREEN ISLE SEEDS புலவர்கிரி கலைவாணி வீதி, C T B டிப்போ அருகாமையில் கோண்டாவில். (2553)

அப்பள வேலை செய்வதற்கு ஆண் - பெண் இருபாலாரும் பக்கெற் றிங்செய்யக்கூடிய பெண்களும் பெண் விநிதர் ஒருவரும் தேவை. லக்ஷ்மி அப்பளக் கொம்பனி (பெற் மோட்டோர்ஸ் அருகாமையில்) சுன்னாகம். (2492)

தொழில் நிறுவனம் ஒன்றிற்கு ரைப்பிங் (ஆங்கில) அல்லது ரைப்பிங் உடன் இதர வேலையும்செய்யக்கூடிய குமாஸ்தா ஒருவர் தேவைப்படுகின்றது தகுதிவாய்ந்தவர் உடன் விண்ணப்பிக்கவும் சம்பளம் தகுதி அடிப்படையில் கொடுக்கப்படும். யாழ்நகரிலிருந்து சுற்றுவட்டத்தில் வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். விளம்பர இல 107 உதயன், யாழ்ப்பாணம், [2792]

சமையற்காரர் மூன்று, சம்பளம் 1300/- (சாப்பாட்டுடன்) தனை சமையற்காரர் மூன்று வெயிற்றர் நான்கு சம்பளம் 600/- (சாப்பாட்டுடன்) காசாளர் நான்கு. தொடர்புகொள்ளவும் Galaxy ரெஸ்ரோரன்ற் No 30 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2554)

லேத்மென் (Lathmen பிற்றர் Fitter) பயிலுனர் (Trainees) உடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் நியூ லங்கா அலுமினியம் தொழிற்சாலை, 20, அராலி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (2556)

## மணமகள் தேவை

அரசாங்கத்தில் சிறப்பான தொழில் புரியும் 1953 இல் பிறந்த (4 இல் செவ்வாய்) மணமகனுக்கு நற்குணமுள்ள அழகான மணமகள் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு கொள்ளவும்: சுவாமியார் அம்பலவாணர் இராசகுலசிங்கம், காணி - திருமணச் சேவை ஏஜென்ட், 11/7 பண்டாரக்குளம் மேற்கு வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (2532)

## போட்டோ ஸ்ரட்

யாழ்நகரில் தரமான "போட்டோ ஸ்ரட்" பிரதிகளுக்கும் தெளிவான 'ஒருனியர்' வேலைகளுக்கும் சிறந்த முறையிலான தமிழ், ஆங்கிலம் 'ரைப்பிங்' வேலைகளுக்கும் என்றும் நம்பிக்கையான நிறுவனம் கிளின்கட், இல; 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து உயர்குல வேளாள பெற்றோர் தங்கள் அழகிய 35வயதான (பயிற்றப்பட்ட கணித ஆசிரியை) மகளுக்கு தகுந்த மணமகன் தேடுகிறார்கள். வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். கொழும்பிலுள்ள பிரபல தனியார் ஸ்தாபனத்தில் அதிகாரி பதவிவகிக்கும் 33வயது சகோதரனுடன் மாற்றுத் திருமணம் செய்யலாம் குறிப்புடன் முழுவிபரங்களும் அனுப்பவும். விள இல 130 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (2530)

அவுஸ்திரேலியாவில் பெற்றோருடன் வசிக்கும் அழகிய இந்து, யாழ். வேளாள குலப் பெண்ணுக்கு 42 வயதிற்கு மேற்பட்ட மணமகன் தேவை யாழ்ப்பாணத்தில் ஆதனத்துடன் கூடிய நல்ல சீதனம் வழங்கப்படும். முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல:- 108, உதயன் யாழ்ப்பாணம் (2505)

இந்து வைசிய லசைவ பேசல 27 வயதுடைய பட்டதாரி பணிப்பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை பட்டம்பெற்ற நிரந்தரத் தொழிலுடையோர் விரும்பத்தக்கவர் சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். C/o உதயன் வி. இ 129. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், (2505)

## வகுப்புகள்

மதி அக்கடமி ஊரெழுவில் ஆண்டு 7, 8, 9, 10, 11 (O/L) வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன பொறுப்பாசிரியர்கள்: விஞ்ஞானம்-இந்திரன், ராஜா - கணிதம், மனோ ரன் - தமிழ், சமூகக்கல்வி – கலைப்பேரரசு. ஆங்கிலம் - வேல் மிர்தன். (2535)

## புத்தகங்கள்

இந்திய வெளியீட்டை மிஞ்சுமளவிற்கு ஜோஸ்யரின் விபவ வருஷ புத்தாண்டுப் பலன் வெளியாகியுள்ளது. விலை 3.00 பன்னிரு ராசி பலன்களுடன் அதிக பஞ்சாங்க விடயங்கள். S. கிருஸ்ண சாமி பெரியகடை யாழ்ப்பாணம் (2502 A)

## பயிற்சி

Computer programming in Basic Language. கால 2 மாதம், Fees 750/- மட்டும் ஆரம்பம் 22-4-88 வெள்ளி 2.00 P.M மேலதிக விபரங்களுக்கு துர்கா ஸ்ரேஸனெர்ஸ், சுன்னாகம். [2347]

## ஜோதிடம்

கிரகநிலை, நவாம்சநிலை, அட்டவர்க்கம், எண் சோதிடம் ஆகிய விபரங்களுடன் ஜாதகக்குறிப்பு பலனுடன் விவாகப் பொருத்தம் விபரமாகவும் எழுதிக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவும் எஸ். சிவயோகம் பூங்கடி கொடிகாமம் வருட்டு [மந்திகை ஆஸ்பத்திரிக்கு கிட்ட] புலோலி தெற்கு புலோலி. (2803)

## சேவை

உறுதி பதிவேடு பிறக்கை தயாரித்தல் (Title Report) நில அளவு செய்தல் (Survey) கட்டிட படம் வரைதல் (Plan Drawing) அதன் மதிப்பீடு செய்தல் (Estimate) கட்டிடவேலை முதலிய (Construction etc) சேவைகளுக்கும் தொடர்பு கொள்ளவும். J.P.T Ltd 3 நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (2566)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத் தெருவில் தனி வீடு நல்ல தண்ணீர் வசதியுடன் வாடகைக்கு கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவும் இல 3 சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். நேரம் காலை 6.00-9.00, 1.00-5.00 p m [2552]

மானிப்பாய் உடுவில் வீதியில் (சந்தியிலிருந்து 300யார் தூரத்தில்) வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: T குணபாலசிங்கம் 19. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (2562)

## வாங்கலாம் விற்கலாம்

பாவித்த நல்லநிலையில் உள்ள கதவுகள், நிலைகள், யன்னல்கள், நிராந்திகள் (பாலை, முதிரை) T அயன் L. அயன் (3 நூல் கனம் 12" V கேடர் 5/8 கம்பி (6'-22' நீளம்) ராக்கை செய்யும் ஆங்கிள் அயன் சுருக்குக் கேற் உடன் விற்பனைக்குண்டு. பழைய கம்பிகள், பைப்புகள், கேடர்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டப்படும். Amman Hardware Stores 23/1 Stanly Road Jaffna. (2458)

## கலர்ப்படம்

உங்கள் கலர் படச் சுருள்களை மைக்ரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகிறீர்களா? Processing இலவசம். பிரதி P C 4.50 Only Processing 25/- தரமாகவும், விரைவாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

## காணவில்லை

இலங்கைவங்கி மானிப்பாய் யோகேஸ்வரன் சென்ற வியாழன் காலை [14. 04. 88] 10,000 ரூபாவை சங்கானை மக்கவங்கு மானிப்பாய்க்கும் இடையில் தவறவிட்டு விட்டார் கண்டெடுத்தவர்கள் நேரில் அல்லது உதயன் பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2560)

ஜெயராணி நடராஜ ஆகிய எனது அடையாள அட்டையைத்தவற விட்டுவிட்டேன். தயவு செய்து கண்டு எடுத்தவர்கள உதயன் காரியாலயத்திலோ அல்லது C/o K M. Nadarajah Nanthavil Kokuvil East Kokuvil விலாசத்திலோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் [2572]

ஜானகி ஆகிய நான் எனது அடையாள அட்டையை (598550808 V) யாழ்நகரில் தவறவிட்டு விட்டேன். கண்டு எடுத்தவர்கள் No- 2 செட்டித் தெரு, நல்லூர் எனது முகவரியில் ஒப்படைக்கவும். (2534)

31121154X இலக்க உடைய அடையாள அட்டை யாழ் பஸ்நிலையம் அண்மையில் தவற விட்டுவிட்டேன் கண்டெடுத்தவர்கள் சங்கரப்பிள்ளை பரராஜசிங்கம் பெரியகுளம் வட்டுக்கச்சி என்னும் விலாசத்திற்கு ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (2546)

## வகுப்பு

Spoken English G C E [O/L] நேரடி வகுப்புக்கள் புதிய பிரிவு சனி, ஞாயிறு மாலை 4-30 மணி. ஆரம்பம்: 20-4-88 ஆறுமாதப் பயிற்சி அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும் Sai Educational Trust 372 பருத்தித்துறைவீதி நல்லூர், யாழ்ப்பாணம். (2337)

## பிரெஞ்சு மொழி வகுப்புக்கள்

பிரெஞ்சு மொழி வகுப்புக்களுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். 23-4-88ல் புதியவகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இயல் இசை நாடகத்துறை பயிற்றுனர்கள் தேவை தொடர்புகொள்ளவும் Alliance Francaise-யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கம் 130, 1ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (2531)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

ஒரு நாள் புறொயிலர் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 15-4-88 விற்பனைக்கு விநியோகம்; சிவப்பு பேடு விலை ரூ 12/50 விபரங்களுக்கு R S K, Farm முருகதி. உடுவில் 2, குபேரன் ஸ்ரோர்ஸ் கொக்குவில் Red Rose Farm தெணியம்பை வல்வெட்டித்துறை இணுவில் வீடியோ சென்ரர் இணுவில் கோகிலா கூல்பார் கொடிகாமம் (2520)

## பணிமனை

பழைய இடத்தில்

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் சங்கானையில் உள்ள பழைய பொலீஸ் நிலையக் கட்டிடத்திலேயே தொடர்ந்தும் இயங்கி வருகிறது [ஓ--29]

---

# குறைந்த சலார்!

புதிய நிர்வாகத்தில் இயங்கிவரும் சுன்னாகத்திலுள்ள

## நியூ சித்திரகலா ஸ்ருடியோ

ஸ்தாபனத்தார்

தமது திறமையான படப்பிடிப்பை அன்பர்கள் ஆதரவாளர்களுக்கு செய்து காண்பிக்கும் பொருட்டு

புத்தாண்டு தினமாகிய

**13 - 04 - 88 முதல் 13 - 05 - 88 வரை**

சகல படப்பிடிப்பும் குறைந்த சலாரில் செய்து கொடுக்கிறார்கள்

குறைந்த சலார் முடிவில் 15.8.88 அன்று எம்மிடம் படம்பிடித்தவர்களின் நம்பர்கள் குலுக்கப்பட்டு அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

---

# TOEFL By S B IYAR

ADVANCED ENGLISH
1988, Dec. O/L ENGLISH
JULY 2nd O/L PAPER CLASS ENGLISH
PROFESSIONAL ENGLISH

மேற்கூறிய வகுப்புக்கள் ஆரம்பம்:

**20 - 04 - 1988**

தொடர்பு கொள்க:
12, வைமன் வீதி, நல்லூர். (2523)

---

# சீட்டிழுப்பு முடிவு

சாவகச்சேரி, சங்கத்தானை, இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரண நிதிக்காக 14 04 88 ல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டின் பரிசு பெற்ற இலக்கங்கள்:-

1ம் பரிசு:- இல 1618
2ம் பரிசு:- இல 1457
3ம் பரிசு:- இல 279

## ஆறுதல் பரிசுகள்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 1688 | (2) | 1406 | (3) | 1396 |
| (4) | 1119 | (5) | 527 | (6) | 2006 |
| (7) | 1180 | (8) | 2663 | (9) | 47 |
| (10) | 1897 | (11) | 1530 | (12) | 2255 |
| (13) | 2605 | (14) | 2322 | (15) | 1577 |
| (16) | 1876 | (17) | 42 | (18) | 2112 |
| (19) | 2469 | (20) | 176 | (21) | 1293 |
| (22) | 664 | (23) | 2307 | (24) | 1841 |
| (25) | 1560 | | | | |

இங்ஙனம்,
இ வீ. வி. ஆலய பரிபாலனசபையினர் [2873]

---

# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

எயர்போர்ட் கிளினேர்ஸ்
150 பேர் தேவை
வயதெல்லை 21 — 40

★ குவைத்

ஆஸ்பத்திரி கிளினேர்ஸ்
பொலிஸ் ஸ்ரேசன் கிளினேர்ஸ்

★ 5 மாத ஒப்பந்தத்தில் எயர்போர்ட் கிளினேர்ஸ் ஆக சவூதி அரேபியாவுக்கு எம்மிடம் பாஸ் போர்ட் தந்தவர்கள் செவ்வாய் கிழமை காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

★ மத்திய கிழக்கு நாடுகளுக்கு துரித கதியில் பிரயாணம் செய்ய உடனே தொடர்பு கொள்ளவும். முற்பணம் அறவிடப்படமாட்டாது சகல நாட்களிலும் காரியாலயம் திறக்கப்படும்.

தொடர்பு:

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

C/4735

---

# 6 ஆம் மாத இதய அஞ்சலி



மண்ணில் 22 — 3 — 1969

விண்ணில் 12 — 10 — 1987

செல்வன்
**நடராசா சுரேஷ்குமார்**
(துரை)

ஊருக்குள் கனிமொழிய
உருவான தோப்பே நீ!
யாரறிவார் அசல் கவிஞன்
அடைவிபத்து மரணங்கள்
நேராமல் காக்கின்ற
முதலுதவி நெறிகற்றோன்!
உயர்கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்
வாணிவிளையாட்டுவளர் கழகப் பொருளாளன்
குண்டுகளால் துப்பாக்கி குண்டுகளால்
கொலையுண்டாய்
இவர் ஆத்மா சாந்தியடையஎமது கண்ணீரை
காணிக்கையாக்குகிறோம்.

வாணி விளையாட்டுக்கழகம் இணுவில் — இங்ஙனம் நண்பர்கள்

(2583)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஏழுர்நாயகம் ஈஸ்வரம்

திதி: 1988 - 4 - 16

மண்ணுலகம் 1955 - 2 - 18

விண்ணுலகம் 1987 - 4 - 28

அனைத்தும் அழிவன என நாம் அறிவோம்
அதில் அழியாதது நுமதன்பதுவே
இகத்தில் உம்மையே நினைத்திருப்போம்
இனி பரத்தில் உம்மில் கலந்திருப்போம்

அன்பு மனைவி,
மழலைகள்

பத்தாவத்தை
இளவாலை. (2558)

---

# 3 ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 23-12-1935

மறைவு: 20-04-1985

திதி: 17-04-1988

**திருமதி நாகரத்தினம் இரத்தினசபாபதி**

அன்னார் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்:

அன்புக்கணவர், பிள்ளைகள் மருமகன், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள, நண்பர்கள்.

சுருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (2822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா—வேலை வாய்ப்பு

1. பாண்போறணை உதவியாளர்
[BAKE HOUSE HELPERS]

20 இடம் வயது 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் OPEN VISA. 10 நாட்களில் பிரயாணம்.

2. விமானதள கிளீனேர்ஸ்
[AIRPORT CLEANERS]

கடவுச்சீட்டு (PASSPORT), கடவுச்சீட்டு முன்பக்கப் படப் பிரதி, 10 படங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும். முகவர் இவ்விடம் (காங்கேசன்துறை) தற்போது தங்கி இருப்பதால் நேரில் சந்திக்கவும்.

T. Indranathan,
M THREE TRAVELS
SOTHY LANE, COLLEGE ROAD,
KANKESANTHURAI.



மத்திய கிழக்கு நாடுகளுக்கான
## பிரயாண ஒழுங்குகள்

● சவூதி அரேபியா
துறைமுக தொழிலாளர்கள்
வீட்டு சாரதிகள்
மெக்கானிக் சாரதிகள்
பிளம்பர்ஸ்
தொழிலாளர்கள்

● குவைத்
ஆஸ்பத்திரி துப்புரவாளர்
பண்ணைத் தொழிலாளர்கள்
வீட்டு சாரதிகள்

மற்றும் சவூதி அரேபியா, குவைத், அபுதாபி, பாக்ரெயின், ஆகிய நாடுகளுக்குப் பணிப் பெண்கள் தேவை

அத்துடன் பாஸ்போட், BOND, VISA, டிக்கட்டிங் முதலியனவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

இந்தியா செல்லும் பிரயாணிகளுக்கான சகல ஒழுங்குகளும் எங்களால் செய்து தரப்படும்.

நீங்கள்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

வ. பரஞ்சோதி
கிருஷ்ணா ட்ரவல்ஸ்
கரடிப்போக்குச் சந்தி,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

எஸ். திருநாவுக்கரசு
(ஆசிரியர்)
சங்கத்தானை லேன்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(2498)



யாழ் - கொழும்பு
## விமான சேவை

பலாலிக்கு ரத்மலானைக்கு விசேஷ போக்குவரத்து வசதிகளுடன் ஒழுங்காக நடைபெறுகின்றது.
இன்று வெற்று ஆசனங்கள் உண்டு.
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடன் ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்!
அடுத்த கிழமை 13ஆம் திகதி தவிர்ந்த மற்றைய நாட்களில் வெற்று ஆசனங்களுக்கு பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

Film roll Processing & Printing Accepted. Delivery within 3 days. Special discount for Studios and bulk orders.
வெளிநாடுகளுக்கு விமான ரிக்கற், பாஸ்போட் Renewal and Alteration and Bonding, Visa, Indian Visa, Confirmation, Reconfirmation and Cancellation ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

MACK
Communications Travels
இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்


# இலங்கை அரசு பின்வாங்குவதற்கு இந்தியா அனுமதிக்கக் கூடாது

## இராணுவ நிர்ப்பந்தம் மூலமாவது வாக்குறுதியை நிறைவேற்றிவைக்க வேண்டும்

### உதயனுக்கு சோ விசேஷ பேட்டி

**சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன்**

இந்திய அரசு மூலம் ஈழத்தமிழர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு எப்படியும் நிறைவேற்ற வேண்டும். அதில் இலங்கை அரசு பின்வாங்குவதற்கு இந்தியா அனுமதிக்கக் கூடாது. இந்த விடயத்தில் எந்த விதத்திலாவது நேரடியாகத் தலையிட்டு இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டிய தார்மீக உரிமையும், கடமையும் இந்திய அரசுக்கு இருக்கிறது. இராணுவ நடவடிக்கை உட்பட எந்த விதமான வழிமுறையையும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க இந்தியா நாடலாம்.

இப்படிக் கூறினார் 'துக்ளக்' சஞ்சிகையின் ஆசிரியரும் நகைச்சுவை நடிகரும், பிரபல வழக்கறிஞருமான சோ. ராமசாமி.

ஈழத்தமிழர் பிரச்சினையில் ஆரம்ப காலம் முதல் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வருபவர் சோ.

அவர் சென்னையில் வைத்து உதயனுக்கு சிறப்புப் பேட்டி ஒன்றை வழங்கினார்.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி:- ஈழத்தமிழர் விடயத்தில் தமிழக அரசியல் கட்சிகள் நடக்கும் விதம் குறித்து ........?

சோ:- ஈழத்தமிழர் நலனை விட இந்த விடயத்தை தமது கட்சிக்கு அரசியல் லாபம் தேட எப்படிப் பயன்படுத்தலாம் என்பதே எல்லாக் கட்சிகளினதும் நோக்கமாக இருக்கிறது. மனதில் ஈழத்தமிழர் நலனைப் பற்றி சிறிது சிந்தித்தாலும் அதிலிருந்து அரசியல் லாபம் எப்படிப் பெறலாம் என்பதிலேயே கட்சித் தலைவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

### பத்திரிகைகள்

கேள்வி:- இவ்விடயத்தில் தமிழக பத்திரிகைகள் நடக்கும் முறை குறித்து.....?

சோ:- பத்திரிகைகள் அரசியல்வாதிக்கு சளைத்தவை அல்ல. தமது பத்திரிகைச் செல்வாக்கைக் கூட்டுவதை நோக்காகக் கொண்டே இவர்கள் செயற்படுகின்றார்கள். தமது செல்வாக்கையும் பத்திரிகை விற்பனையையும் அதிகரிக்கவேண்டும் என்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு இந்தியப் படையைக் கண்டிக்கிறார்கள்;

கேள்வி:- தங்களுக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் இரகசிய நட்புறவு இருப்பதாகவும் தாங்கள் இலங்கைக்குச் சென்றபோது அங்கு அரச விருந்தினராகத் தங்கி வரவேற்று அவர் உபசரித்ததாகவும், இதனால்தான் தமிழராக இருந்தும் நீங்கள் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும், தமிழ்ப் போராளிகளுக்கு எதிராகவும் செயற்படுவதாகக் கூறப்படுகிறது. இது உண்மையா?



சோ உதயன் சிறப்புப் பிரதிநிதிக்கு பேட்டி அளித்த சமயம் எடுக்கப்பட்ட படம். (இ-உ)

சோ:- எனது கருத்தை ஏற்காத தீவிரவாதிகள் சிலர் பரப்பிய வதந்தி இது. தமிழகத்திலும் இத்தகைய புரளியைக் கிளப்புவதற்கு சில சக்திகள் இருக்கின்றன. இலங்கை வந்திருந்தபோது ஒரே ஒரு தடவைதான்; ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்தேன்; பேட்டி காண்பதற்காக. அதற்குப் பின்னர் ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனாவுக்கு அளித்த விருந்தின்போது ஓரிரு நிமிடங்கள் அவருடன் பேசினேன்.

இதைத் தவிர எனக்கும் அவருக்கும் வேறு தொடர்புகளே இல்லை.

மேலும் 'துக்ளக்' பத்திரிகையின் செலவிலேயே அங்கு போய்த் தங்கித் திரும்பி வந்தேன். அரச விருந்தினராகத் தங்கினேன் என்பது பொய்.

எனது பிளாஸ்டிக் தொழிற்சாலைக்கு ஜெயவர்த்தனா உதவி செய்தார் என்று பேசப்பட்டது, அதுவும் முற்றிலும் பொய் ஏனென்றால் எனக்கு பிளாஸ்டிக் தொழிற்சாலையோ அல்லது வேறு தொழிற்சாலைகளோ கிடையாது.

கேள்வி:- ஈழத்தமிழர் விடயத்தில் மத்திய அரசின் போக்கை நீங்கள் இப்போது ஆதரிக்கிறீர்கள். அதனால் உங்களுக்கும் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், இந்நிலையில் அக்கட்சியின் நிதி உதவியை நீங்கள் பெற்று, அக்கட்சிக்கு ஆதரவாக தினசரிப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகவும் கூறப்படுகிறதே?

சோ:- இதுவும் வெறும் புரளியே. ஈழத் தமிழர் பிரச்சினையில் நான் வெளிப்படுத்தி வந்த கருத்திலிருந்து என்றும் நான் மாறுபடவில்லை. இந்திய அரசு தான் தனது போக்கை மாற்றி நான் கூறும் நிலைக்குத் திரும்பியிருக்கிறது.

கே: ஈழத்தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமானால் இந்தியா என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

### பிரச்சினைத் தீர்வுக்கு

சோ: முதலாவது சட்ட விரோத ஆயுதங்களைப் பறிக்கவேண்டும்.

இரண்டாவதாக தமிழர்களுக்கு இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகளை எப்படியும் நிறைவேற்றச் செய்ய வேண்டும்.

இதற்காகத் தயங்காமல் இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும். அப்படி இலங்கை அரசு நழுவ முயன்றால் எந்த முறையைக் கையாளவேண்டும் — தேவையானால் இராணுவ நடவடிக்கை மூலமும் — இலங்கையை வழிக்குக் கொண்டுவரச் செய்ய இந்தியா தயங்கக் கூடாது. இதற்கான தார்மீகக் கடமையும் உரிமையும் இந்தியாவுக்கு உண்டு.

கே: ஈழத் தமிழர் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட இன்னும் வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதுகிறீர்களா?

சோ: நிச்சயமாகக் கூடிய விரைவில் ஒப்பந்தம் நிறைவேறும். அந்த முயற்சியில் இந்தியா வெற்றிபெற்று அங்கு ஸ்திரமான அமைதி ஏற்பட வாய்ப்புகள் இன்னும் இருப்பதாகவே நம்புகிறேன்.

### கண்டிக்காதது ஏன்?

கே: இந்தியப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். உயிர், உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் கணக்கிலடங்கா. இதற்காக நீங்கள் கண்டனம் தெரிவிக்காதது ஏன்?

சோ: இந்தியப் படைகள் இதனை விரும்பிச் செய்யவில்லை. சூழ்நிலை அவர்களைக் கட்டாயப்படுத்தியது.

கே: ஈழத் தமிழர் பிரச்சினை இப்படி மோசமடைய யார் காரணம்?

சோ: ஆரம்பத்தில் இந்திரா காந்தி. பின்னர் ராஜீவ் காந்தி.

இந்தியாவில் தமிழ்த் தீவிரவாதிகள் சட்டவிரோதமாகக்கூடி, சட்டவிரோதமாக ஆயுதங்களைச் சேகரிக்க உதவியவர்கள் இவர்களே. இதனால் தான் பிரச்சினை இந்த ரூபத்தை எடுத்தது.

கே: நீங்கள் ஒரு 'நெகடிவ் அரசியல்வாதி' என்று கூறுகிறார்களே! பிழையை மட்டுமே கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்துகிறீர்களே தவிர அவற்றைத் திருத்தி ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வழி காட்டுவதில்லை என்று குற்றம் சுமத்தப்படுகிறதே!

சோ: தவறுகளைக் கடுமையாகச் சுட்டிக்காட்டும் பத்திரிகைகள் இங்கு இல்லாமல்போனதே இக்குற்றச்சாட்டுக்குக் காரணம். அரசியல், பொருளாதாரம் ஆகியவை முதல் அரசமைப்புத் திருத்தம்வரை எங்கு பிழை ஏற்பட்டாலும் அவற்றை நான் விமர்

[4 ஆம் பக்கம் பார்க்க]


## சவூதி
### எயர்போட்
### கிளீனேர்ஸ்

✱ கட்டுப்பணம் ரூபாய் 5.500/- மட்டுமே
✱ கன்ட்ராக்ட் 6 மாதங்கள் மட்டுமே இத்தடன்
★ ஜேர்மனிக்கு ஒருவருக்கு அமெரிக்காவுக்கு இருவருக்கும் உடனடி பயணத்துக்கு வாய்ப்பு இருக்கிறது விரும்புபவர்கள் 19-4-88 குள் பாஸ்போட்டுடன் நேரில் வரவும்.
✱ ஜேர்மன் அமெரிக்கா போவோர்க்கு ஓரளவு ஆங்கிலம் பேசத்தெரிந்திருக்கவேண்டும்.

முற்பணம் எதுவும் இல்லை

✱ சிவா
6/2. மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்,
[அசோக் ஹோட்டல் முன்பாக]
(2538)




CHARTERED LICENTIATE
NEW SYLLABUS
SEPT. 88
CLASSES COMMENCING ON
23.4.88
Result Oriented Institute in North
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14. St PETERS LANE.
JAFFNA.
C/4637



மனதுக்கினிய நறுமணம் தரும்
சூரியன் மார்க்
தசாங்க தூபம்
இது
நாஷனல்
வாசனைத் தொழிலக தயாரிப்பு
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
சுந்தரம் பிறதர்ஸ்
சித்த ஆயுர்வேத மருந்துகள்:
கோயில் அபிஷேக திரவியங்கள் விற்பனையாளர்
● தற்காலிக இடம்

கந்தர்மடம், 23. மணல்தறை வீதிக்கு வழிகாட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். பி. அன்ரன்

வழங்கும்

## உடனடியான பயண ஒழுங்குகள்

★ சவுதி அரேபியா [Open Visa]

கீழ்காணும் பதவிகளுக்கு உடனடியான பயண ஒழுங்குகள் செய்யப்படும்:

| | | | |
|---|---|---|---|
| Electrician- | SR 700 | Carpenter- | SR 700 |
| Mason- | SR 700 | Plumber- | SR 700 |
| தொழிலாளர்கள் | | - | SR 500 |
| Heavy Vehicle Drivers | | - | SR 700 |

● ஞாயிறு, திங்கட்கிழமையில் நேர் முகப்பரீட்சை கொழும்பில் நடைபெற விருப்பதால் உடனடியாகப் புறப்பட விரும்புவோர் மட்டும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயதெல்லை: 26 — 35 வருடங்கள்

★ ஐக்கிய அரபு இராச்சியம்

அபுதாபியைச் சேர்ந்த பாரிய மீன்பிடி ட்ரோலர்களில் பணி புரிவதற்கு மீன்பிடி அனுபவம் உள்ள முப்பது பேர் உடனடியாகத் தேவை.

சம்பளம்; 300 அமெரிக்க டொலர் (ரூ. 9000/ க்கு மேல்)

இம் மாதம் 18ம் திகதியளவில் பயணம் மேற்கொள்ள வேண்டும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ குவைத்

| | |
|---|---|
| பண்ணை வேலையாட்கள் | - 26 டினார் |
| சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் (ஆண் / பெண்) | - 32 டினார் |
| Letter Press Operators | - 65 K D |
| Offset Painters | - 65 K D |
| Art Binder and Cutter | - 65 K D |
| Photographer/ Layout Artist | - 65 K D |
| Poster Designer | - 65 K D |
| Forklift Operators | - 65 K D |
| Deck Workers | - 40 K D |

★ சவுதி அரேபியா, குவைத் நாடுகளின் துறைமுகங்களில் வேலை வாய்ப்புகள் உண்டு. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

★ மற்றும், கனடா நாட்டுக்கான பயண ஒழுங்குகளும் சவுதி, அபுதாபி, சிங்கப்பூர் நாடுகளுக்கு வீட்டு வேலைப்பணிப்பெண் வாய்ப்புகளுக்கு கூடிய விரைவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

மற்றும் விபரங்கள் யாவுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

## எஸ் பி. அன்ரன்

வேல்ட் ட்ரேட் சென்டர்

(மக்கள் வங்கி முன்பாக)

இல. 114 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.



## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
7
5
1929

மறைவு
20
3
1988

### திருமதி இரத்தினம் நடராசா

சிவபதமடைந்த திருமதி இரத்தினம் நடராசா அவர்களின் அந்தியட்டி வீட்டுக்கிருத்தியம் அன்னாரின் இல்லத்தில் 18-4 88 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். இவ்வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

கொக்குவில் கிழக்கு, கொக்குவில். — கணவன், பிள்ளைகள், மருமக்கள்.

[2525]


# அங்காடி வியாபாரிகள் வெளியேற வேண்டும்

## ஆணையாளர் சிவஞானம் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஏப் 17

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் யாழ். நகர வீதியோரங்களில் அங்காடிக்கடைகளை அமைத்தவர்கள் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னர் இருந்த வீதியோர வியாபாரிகளுக்கு ஒதுக்குப்புறமான இடங்களில் வியாபாரம் செய்ய நாம் அனுமதித்திருந்தோம்.

அதன் பின்பு வீதியோரங்களை புதியவர்கள் பிடித்திருப்பது அடாவடித்தனமானது போக்குவரத்துக்கு இடைஞ்சலானது.

இவர்களை வியாபாரம் செய்ய அனுமதிப்பதற்கு ஒரு இடம் தானும் இல்லை.

இதனால்தான் உடனடியாக இவர்கள் தங்கள் வீதியோர வியாபார நிலையங்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்கிறேன்

இப்படி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## ஊர்காவற்றுறை தபாலகத்தில் கொள்ளை

ஊர்காவற்றுறை, ஏப். 17

ஊர்காவற்றுறை பிரதம தபால் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமையன்று இரவு துணிகரக் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இக்கொள்ளையின் போது ஒன்பதாயிரம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் முத்திரைகள், வெளிநாட்டு தபாலுறைகள் ஆகியனவும் அபகரித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ 16)

## பாடசாலை வளர்ச்சிக்கு சுறுசுறுப்புமிக்க அதிபர்களே காரணம்

மானிப்பாய், ஏப் 17

சுறுசுறுப்பும், துடிப்பும் மிக்க அதிபர்களின் சேவையினால் பாடசாலைகள் அபரிமித வளர்ச்சி பெறுகின்றன. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிகுந்த அதிபர்களின் செயற்பாடுகள் அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின்பே துலங்குகின்றன.

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு எஸ். எம். மூர்த்தி யின் பிரிவு சார் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. தனஞ்செயன் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திரு ஆ. கமலநாதன் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பழைய மாணவர் சங்கம் ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து இவ்விழாவை நடத்தினர்

இப்பாடசாலையிலிருந்து மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்கள் திரு. நகுலேஸ்வரன், திருமதி கமலேஸ்வரி சின்னத்துரை, திருமதி ரகிரண பதிப்பிள்ளை ஆகியோருக்கு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது

பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் சார்பில் பண்டிதர் திரு எஸ். இராசையா, மற்றும் ஆசிரியர்கள், சி. சிவபாதசுந்தரம், சிவ நடராசா, இ. வை. சனசந்திரம், திரு கணேசபிள்ளை, செ. சந்திரகாந்தன், திருமதி அன்னலட்சுமி உட்படப் பலரும் பாராட்டுரை வழங்கினர்

(இ 90)

## விளையாட்டரங்கு

### சென்றலைட்ஸ் கிண்ண மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம் ஏப் 17

சென்றலைட்ஸ் கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் 22 கழக அணிகளின் விபரம்:-

பிரிவு "ஏ":- ஐடியல் கிரிக்கெட் கழகம், அலோய்சியஸ் வி. க அரியாலை வி. க (பி)

பிரிவு "பி":- அரியாலை ஐக்கிய வி. க. (ஏ), யங் லயன்ஸ் வி க, ஈச்சமோட்டை மின்னொளி வி க.

பிரிவு "சி":- கலை ஒளி வி க, கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் சென்றலைட்ஸ் வி க (ஸ்பிறிட் யஸ்)

பிரிவு 'டி':- யங்ஸ்ரார்ஸ் வி க ரெட் ஸ்ரார்ஸ் வி. க, சென்றலைட்ஸ் வி. க. (கொன்கோட்)

பிரிவு "ஈ":- கலை ஜோதி இளம் கழகம், வளர்மதி வி. க. (ஏ), அரியாலை ஸ்ரீ கலைமகள் வி. க.

பிரிவு "எவ்":- ஹென்ரேர்ஸ் வி க, யாழ் முஸ்லிம் வி. க, இன்டிப்பென்டன் கிரிக்கெட் கழகம்.

பிரிவு "ஜி":- வளர்மதி வி. க (பி) சென். ஜேம்ஸ் வி. க.

பிரிவு "எச்":- அளவெட்டி யுக் வி. க, சில்வர் ஸ்ரார்ஸ் வி. க,

(இ-க)

## போதனா ஆஸ்பத்திரிகளில் 22 முதல் சட்டப்படி வேலை

கொழும்பு, ஏப் 17

சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் எல்லாப் போதனா ஆஸ்பத்திரிகளிலும் இம்மாதம் 22 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தில் உள்ள ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளுக்கு அரசு செவி சாய்க்காத பட்சத்தில் இச்சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் திட்டமிட்டபடி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கைகளில் சில வருமாறு:

★ கூடுதல் சம்பளம்

★ அத்தியாவசிய சேவைகளை தனியார் மயப்படுத்தக் கூடாது.

★ கண்டபடி கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

★ கைது செய்யப்படுபவர்கள் காணாமற் போவது தடுப்புக் காவலில் காரணமின்றி வைத்தல் நிறுத்தப்பட வேண்டும்.

(ஒ-எ)

## விபத்தில் சிறுவன் காயம்

குருநகர், ஏப் 17

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் காயம் அடைந்தான்.

யாழ் கடற்கரை வீதி கொட்டடி மாடிப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது

கடற்கரை வீதியைச் சேர்ந்த டவளப்பு ரஜனி என்ற 6 வயதுச் சிறுவனே காயம் அடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்

[ -15]

## யூனியன் கல்லூரி வகுப்புக்களைத் திருத்த அபிவிருத்தி சபை உதவும்

காங்கேசன்துறை, ஏப் 17

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் சேதமடைந்த 4 வகுப்பறைகளைப் புனரமைக்க கல்லூரி அபிவிருத்திச்சபை முன்வந்துள்ளது.

அபிவிருத்திச்சபை உறுப்பினர்களின் உதவியுடனும், சிரமதானம் மூலமும் இவ்வகுப்பறைகளைப் புனரமைத்து மாணவர்கள் கல்வி கற்க வசதி செய்துகொடுக்க அபிவிருத்திச்சபை ஏற்பாடு செய்துள்ளது

கல்லூரி அதிபர் திரு. என். ஸ்ரீபுஸ்பநாதன் தலைமையில் இதற்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது.

அதிபரும், அபிவிருத்திச்சபை நிர்வாகிகள் திரு பூபாலசிங்கம், திரு எஸ். ரவீந்திரன் ஆகியோரும் அடிக்கல் நட்டனர்

அதிபர் தமதுரையில் கல்வி நிலையங்களைப் புனரமைக்க உதவிகள் கிடைப்பதில் தாமதம் நிலவுவதால், நாமாகவே சொந்தமுயற்சியால் இப்படியான புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

[ -68]

## யுத்த நிறுத்தத்துக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 17

தமிழ்ப்பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் யாவும் முற்றாக கைவிடப்பட்டு யுத்த நிறுத்தம் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

எந்தவித முன்நிபந்தனையுமின்றி தமிழ்ப் போராளிகள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டு சுமுகமான அரசியல் தீர்வு ஒன்றுக்கு வழி கோலப்பட வேண்டும்.

தமிழ் மண்ணில் வாழும் தமிழ்பேசும் மக்களின் ... யாவும் அவர் ... வேண்டும். (இ-க-28)

## இலங்கை ...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

சித்து வருகிறேன். நான் செய்யும் அளவுக்கு வேறு எந்தப் பத்திரிகையும் செய்யவில்லை. நான் அப்படி விமர்சிப்பதால் பிழை திருத்தப்படுமா என்று எனக்குத் தெரியாது.

ஆனால் பத்திரிகையாளன் என்ற முறையில் மக்களுக்கு அவைகளைச் சுட்டிக் காட்டவேண்டியது எனது கடமை. அதனைச் செய்கிறேன் ஆகவே நீங்கள் கூறும் குற்றச்சாட்டை நான் ஏற்கவில்லை.

(இ உ)

## வேறு தொழில் தேடுமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம், ஏப் 17

"ஈழநாடு" நிறுவனத்தில் பணி புரிந்த ஊழியர்களை, வேறு தொழில் முயற்சிகளைத் தேடுமாறு, நிர்வாகத்தினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்

ஊழியர்களை மீண்டும் வேலைக்கமர்த்திச் சம்பளம் வழங்கும் நிலையில் தாம் இல்லையென்றுச் சகல பணியாளர்களுக்கும் அனுப்பிய கடிதம் ஒன்றில் நிர்வாகத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி 29 ... மேற்படி நிறுவனம் மூடப்பட்டிருப்பது தெரிந்ததே.

(அ)


யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுத்தது)

259, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

## கிராமிய வங்கி இடம்மாற்றம்

மேற்படி சங்கத்தில் இயங்கி வந்த கிராமிய வங்கி, 11-4-88 திங்கட்கிழமை தொடக்கம் வாடிக்கையாளர் நலன் கருதி 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்திற்கு (சங்க இருப்புக் கிளையில்) மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

14 - 4 - 1988 — பொது முகாமையாளர்

[C/4736]



மகளிருக்கான

## DIPLOMA IN NURSING

(தாதிப்பயிற்சி நெறி)

புதிய பிரிவினருக்கான வகுப்புகள் ஆரம்பம்

25. 04. 88

★ வெளிநாட்டு உள்நாட்டு வேலைவாய்ப்புக்கட்கு இலகுவான ஆங்கில வகுப்புகள்.

★ இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அரசாங்க தகுதிபெற்ற மருந்தாளர், தாதியர் அடங்கிய விரிவுரையாளர் குழு.

## North Ceylon Technical Institute

14, ST. PETERS LANE, JAFFNA.



## வைத்திய அதிகாரி தேவை

யாழ். மாநகரசபை எல்லையுள், பிரதான வீதியில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆங்கில வைத்தியசாலையை நடாத்த வைத்திய அதிகாரியும், உதவி வைத்திய அதிகாரியும் தேவை. ஆர்வமுடையோர் தயவுசெய்து விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல:- 131

மே. பா. உதயன்.

யாழ்ப்பாணம்.

(C/4733)



## Ecolom Tuition Centre

(மனோகரா சந்தி)

SPOKEN ENGLISH

ஆசிரியர் பிறிட்டோ

ஆரம்பம் 20-4-88 (புதன்)

(பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்க)

(2027)



## ஸ்ரீலங்கா கல்வி நிர்வாகத் தெரிவுப் பரீட்சை

மே 7 ஆம் திகதி

S. L. E. A. S. தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களுக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

★ பரீட்சைக்குரிய சகல பாடங்களிலும் விரிவான போதனை,
★ தரமானபல விரிவுரையாளர்களின் இணைந்த சேவை.
★ தொடர்ச்சியாக 10 தினங்கள் — காலை 9—12மணி விரிவுரைகள்.
★ கட்டணம் ரூபா 250.00 (முழுப்பயிற்சிக்கும்.)

ஆரம்பம்: 20 — 04 — 88

விபரங்களுக்கு:

ASTAN INSTITUTE

166/1 HOSPITAL ROAD, JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நீ எதைக் கற்றறிந்தாலும் உன்னுடைய சொந்தப் பிரச்சினைகளுக்கு நீயாகவே தீர்வு காண வேண்டும். அப்படிக் காண முடியா திருந்தால் கற்றதின் பயன் என்ன?
— ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-293/2நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
17-04-1988 த பெ:-. இல23


## இலவு காத்த கிளிகள் ஆகவேண்டுமா தமிழர்?

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டும் தான் நடப்பதாகப் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பேராபத்து வடக்கிலும் உருவாக்கப்பட்டு வருகிறது.

வெலிஓயா என்ற புதிய பெயரில் வன்னித் தமிழ்ப் பிரதேசத்தில் அரசாங்கத்தின் உதவியுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் துரிதமாக நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்த மண் பறிப்புச் சதியை ஆட்சேபித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரத்தில் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

யார் சொன்னாலும் சொல்லட்டும், தாம் நினைத்த மாதிரி தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தியே தீருவது என ஸ்ரீலங்கா அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது. கங்கணம் மட்டுமென்ன காரியத்தையும் வெகு சாதுரியமாகவும், தந்திரமாகவும் சாதித்தும் வருகிறது.

தமிழர் தாயகத்தைப் பறிக்க வேண்டும் தமிழர்கள் தமக்கு ஒரு தாயகம் இருப்பதாக சொல்வதற்கு இடம் வைக்கக்கூடாது இந்த முக்கிய குறிக்கோளை அடைவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தன்னாலான, தனது சக்திக்கு உட்பட்ட சகலதையும் கடந்த பல வருடங்களாகச் செய்து வருவது தெரிந்த விடயமே.

வடக்குக் கிழக்குப் பகுதிகள் தமிழர்களினதும் மற்றும் பல சமூகத்தவர்களினதும் வதிவிடம் என்ற சொற்றொடரை இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வெகு நாசூக்காகப் புகுத்திய பின்னர் —

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் வேகமாக வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

சிங்கள மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்பட்டு விட்டதாக, குய்யோ முறையோ என ஒப்பாரி வைத்து, கிழக்கில் தனது படைகளை வெற்றிகரமாகச் சேவையில் ஈடுபடுத்தி இருக்கிறது ஸ்ரீலங்கா அரசு.

தமது படைகளைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரசு காட்டிய அவசரத்துக்கு உள்நோக்கம் இருந்தது என்பதை இந்தப் பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அதாவது தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஆயுதப்பாதுகாப்புடன் செய்து முடிப்பதே அந்த உள்நோக்கம்.

தனது உள்நோக்கத்தை ஸ்ரீலங்கா அரசு கிழக்கில் கனகச்சிதமாகச் செயற்படுத்தி வருவதை எல்லோரும் காண முடிகிறது

கிழக்கில் மட்டும் போதாது, வடக்கிலும் தமிழ் மண்பறிப்பு நடத்தியே ஆகவேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு திடசங்கற்பம் பூண்டிருக்கிறது என்றே நம்பத்தோன்றுகிறது

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுலுக்கு முன்னர், அமைதிப்படை இங்கிருக்கும் போதே வடக்கிலும் சிங்களக் குடியேற்றத்தை நடத்திக்காட்டித் தனது கெட்டித்தனத்தை இந்தியாவுக்கும் நிரூபித்துவிட வேண்டும் என ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் அவரது அரசினரும் தமக்குள் சபதம் எடுத்திருக்கின்றனர் போலும்!

தமிழர் நலன்களைக் கவனிக்கவென்று வந்த இந்தியா, இந்த விடயத்தில் என்ன செய்யப் போகிறது? அதன் நிலைப்பாடு என்ன? எல்லாமே பெரும் மறைபொருளாக, பூடகமாக இருக்கின்றன.

தமிழர் நலன்களை இந்தியா இந்த லட்சணத்தில் தான் காப்பாற்றப் போகிறது என்றால் —

தங்கள் உரிமைகளை அது பெற்றுத்தரும் என்று தமிழ் மக்கள் எப்படி நம்பி இருப்பது?

ஈழத் தமிழர்கள் இலவுகாத்த கிளிகள் ஆக வேண்டுமா? இந்தியா அதனைத் தான் விரும்புகிறதா?

இல்லையேல், தமிழ் மக்களின் பிரதேசங்களில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களை உடன்நிறுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்தி, அதற்குச் செயலுருவம் கொடுக்க வகை செய்ய வேண்டும்.

### கந்தரநுபூதி மனனப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப் 17

கந்தரநுபூதி மனனப் போட்டியில், பண்ணாகம் அண்ணா கலைமன்றச் சிறுவர் பாடசாலை மாணவ மாணவிகள் பரிசுகளைப் பெற்றனர்.

பண்ணாகம்விசுவத்தனை முருகப் பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு பிள்ளைத்தமிழ் வெளியீட்டுச்சபை இந்தப் போட்டியை நடத்தியது.

பரிசு பெற்றோர்:- செல்விகள்: இ. தாரணி, த. தயாநிதி, சகாயநிதி, சி. சிவரஞ்சினி, ப. பிரிய தர்சினி, கு. கிருவாம்பிகை, எ. சுவீதா, வி.சாந்தினி, த. மதுரா, செல்வன்கள்:- இ. கபிலவன், கி. மயூரன், சி. திருமாறன், என். நடேஸ்வரன். (இ-க)

# யுரேனியம் உற்பத்தி செய்வதில் பாகிஸ்தானுக்குச் சமாதான நோக்கமே கிடையாது!

## ஜப்பானில் பிரதமர் காந்தி கண்டனம்

டோக்கியோ, ஏப் 16

பாகிஸ்தான் யுரேனியம் உற்பத்தி செய்வதில் சமாதான நோக்கம் எதுவும் கிடையாது என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்து இருக்கின்றார்.

ஜப்பான் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று வியட்னாமுக்கு திரு. காந்தி புறப்பட்டார்.

அதற்கு முன்னர் டெலிவிஷன், பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் மேலும் சொன்னதாவது;

சீக்கியத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானில் பயிற்சி முகாம்கள் உள்ளன அவை பற்றிய துல்லியமான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

பெரிய ஆயுதங்களை ஏற்றிச் செல்வதற்கான முறையில் தனதுசண்டை விமானங்களை பாகிஸ்தான் திருத்தி அமைத்து வருகின்றது.

அணுகுண்டு தயாரிப்பு சீக்கியத் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பது ஆகியவையே பாகிஸ்தானுடன் ராஜதந்திர உறவுகளை வளர்த்துக் கொள்வதற்குத் தடையாக உள்ளன

இப்படி பிரதமர்காந்தி சொன்னார்.

கடந்த வெள்ளிக்கிழமை 6 மாத கால இந்திய விழாவை பிரதமர் காந்தியும் ஜப்பானிய பிரதமர் டாகஷிராவும் ஆரம்பித்து வைத்தனர். (எ)

### விமானக் கடத்தல் நாடகம் தொடர்கிறது!

அல்ஜியர்ஸ் ஏப் 16

குவைத் விமானம் கடத்தப்பட்டு நேற்றுடன் 12 தினங்களாகி விட்டன

அல்ஜியர்ஸில் இவ் விமானம் தற்சமயம் 32 பயணிகளுடன் தரித்து நிற்கின்றது

கடத்தல்காரர்களுடன் அல்ஜியர்ஸ் அதிகாரிகள் நேற்றும் தொடர்ந்து பேசினர். (எ)

### வெளி உலகில்

### பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்டுகளுக்கு சீனா உதவமாட்டாது அக்யூனோ அறிவிப்பு

பீகிங் ஏப 16

பிலிப்பீன்ஸில் கிளர்ச்சி நடத்தி வரும் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று சீனா தெரிவித்து உள்ளது.

சீன அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொராஸோன் அக்யூனோ இத்தகவலை வெளியிட்டார்.

திருமதி அக்யூனோ தற்சமயம் சீனாவில் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருக்கின்றார் (எ)

### சுட்டுக் கொலை!

ஸ்பெயின் நாட்டில் இரண்டு பொலீஸார் சுடுக் கொல்லபபட்டனர்.

பாஸ்க் மாநிலத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது

பாஸ்க் இன பிரிவினைவாத கெரில்லாக்களே இவர்களைச் சுட்டனர் என்று ஸ்பெயின் அரசு அறிவித்தது [ ]

### கன்னடத் தமிழர் பெங்களூரில் ஆர்ப்பாட்டம்

இலங்கை இனப்பிரச்சினையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும்படி கன்னடத் தமிழர்கள் வார இறுதியில் பெங்களூரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்

கன்னடத் தமிழர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்

கர்நாடக ஆளுநர் திரு பி வெங்கட சுப்பையாவிடம் ஆர்ப்பாட்ட முடிவில் மகஜர் ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்

இலங்கைத் தமிழருக்கு எதிரான போக்கைக் கைவிட்டு, யுத்த நிறுத்தத்தை உடனடியாகக் கொண்டுவரும்படி இந்திய மத்திய அரசைக் கோருவதாக அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது (ஒ-எ)

## ஆப்கன் அமைதி உடன்பாடு கைச்சாத்தான நிகழ்ச்சிகள் பற்றிய பின்னணித்தகவல்கள்

ஜெனிவா, ஏப். 16

சரித்திரப் பிரசித்திபெற்ற ஆப்கன் அமைதி ஒப்பந்தம் நான்கு மொழிகளில் தயாரிக்கப்பட்டது.

ஆங்கிலம், ரஷ்ய, உருது, புஷ்டு மொழிகளே அவை

நான்கு அத்தியாயங்களைக் கொண்ட 36 பக்க தஸ்தாவேஜு அந்த ஒப்பந்தம்

முதலாவது, இரண்டாவது அத்தியாயங்களில் ஆப்கன், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களான அப்துல்வாகிலும் செயின் நூரானியும் கையொப்பமிட்டனர்.

முதலாவது அத்தியாயம், உள்நாட்டு விவகாரங்களில் இரு நாடுகளும் தலையிடக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

இரண்டாவது அத்தியாயம், ஆப்கன் அகதிகள் தாயகம் திரும்ப வழி வகுக்கின்றது

மூன்றாவது அத்தியாயம், வல்லரசுகள் வழங்கும் உத்தரவாதத்தைக் கொண்டது இதில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ், சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்ட்நாடஸே ஆகியோர் கையொப்பமிட்டனர்

நான்காவது அத்தியாயத்தில் சோவியத் துருப்புக்களை ஆப்கனில் இருந்து விலக்கிக் கொள்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயத்தில் அமெரிக்க, சோவியத், பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் கையொப்பமிட்டனர்

கைச்சாத்திடும் வைபவம் 20 நிமிடங்கள் நடந்தன நிகழ்ச்சி நடந்த மண்டபத்துக்கு பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் முதலில் வந்தார் அவரைத் தொடர்ந்து ஐ. நா மத்தியஸ்தர் டீகோ கொடவெஸ் வந்தார்

அதன்பின் ஆப்கன், பாகிஸ்தான் அமைச்சர்கள் வந்தனர்.

ஆறு ஆண்டுகளாக இவர்கள் நேர்முகமாகச் சந்தித்துப் பேசுவதில்லை ஐ நா மத்தியஸ்தர் ஊடாகவே பேச்சுகளில் கலந்து கொண்டனர்.

இவர்கள் இருவரும் அன்று ஆள் பார்த்துக் குசலம் விசாரிக்கவில்லை; புன்சிரிப்பும் செய்யவில்லை.

கைச்சாத்திடும் நிகழ்ச்சி ஐ நா பொதுச் செயலாளர் முன்னிலையில் இடம்பெற்றது

பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் பின்னர் சொன்னதாவது;

"கைச்சாத்திட்டவர்கள் இவ்வுடன்படிக்கை ஒப்பந்தத்தின் உணர்வுகளைச் சொல்லுக்குச் சொல் அமுல் நடத்துவர் என்று நம்புகின்றேன்" (ர)

### சமய நிகழ்ச்சிகளில்

### இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப் 17

யாழ் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ மானது இன்று 17-04-88 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

15 தினங்களுக்குத் தொடர்ந்து உற்சவங்கள் நடைபெறும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மே 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நிகழும். (இ-ஒ)

### மகோற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 17

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

15 தினங்கள் இடம் பெறும் இந்த உற்சவத்தில் தேர்த்திருவிழா எதிர்வரும் 30 ஆம்திகதியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ஒ-க)

### அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 17

காங்கேசன்துறை முதலிகளவு அருள்மிகு முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்துநடைபெற்று வருகிறது

எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உற்சவம்நிறைவுபெறும்.

தினமும் விசேஷ அபிஷேகங்களுடன் பஜனைப் பாடல்கள், பண்ணிசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுவருகின்றன. (ஒ-க)

## யாழ் நகர போக்குவரத்து சீர் செய்யப்பட வேண்டும்

### ஆணையாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப் 17

அங்காடி வியாபாரிகளை வேறு இடத்திற்கு மாற்றி விடுவதன் மூலம் யாழ். நகர போக்குவரத்துக்களையும் சீர் செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

யாழ். வர்த்தகர்சங்கம் யாழ். மாநகர ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜா ஒன்றில் இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மைக் காலத்தில் யாழ். நகரில் அங்காடி வியாபாரிகளின் வியாபாரம் பெருகிக் கொண்டே வருகின்றது என்பது தாங்கள் அறிந்ததே.

இதனால் யாழ்ப்பாணப் பட்டினம் தனது சோபையை இழந்துள்ளது சனநெரிசல் மிகுந்துள்ள இந்நிலையில் நடைபாதைகளில் கடைகளைப் பரப்பியிருப்பதால் பாதசாரிகள் நடுவீதியால் செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதனால் வாகனப்போக்குவரத்து நெரிசல் பெரிதும் ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக யாழ் பஸ் நிலையப் பகுதிகளில் சந்திகளில் கூட நடைபாதை வியாபாரிகள் தங்கள் பொருட்களை பரப்பி வியாபாரம் செய்வதைக்காணக்கூடியதாக இருக்கின்றது. மினி பஸ்கள் தரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் அங்காடி வியாபாரம் நடைபெறுவதால் மினிபஸ்கள் நடுவீதியிலேயே நிற்பாட்டப்பட்டுள்ளன இதனால் வாகனங்கள் நகர முடியாததாக நெரிசல் ஏற்பட்டுள்ளன.

மேலும் தற்போது ஆஸ்பத்திரி வீதிமட்டுமே இருவழிப் பாதையாக வாகனப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது

இந்த வீதியால் உள்ள நடை பாதைகளிலும் பொருள்கள்பரப்பி வியாபாரம்நடப்பதால் மக்கள் நடைபாதையை பாவிக்க முடியாத நிலையில் இருக்கின்றனர்.

அத்துடன் சைக்கிள்களையும் நிற்பாட்ட முடியாது அவதிப்படும் நிலைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-க)

## ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி

கொழும்பு ஏப் 17

பட்டதாரிகள், பட்டதாரிகளல்லாத ஆசிரியர்கள் ஆகியோருக்கு சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களை கல்வி அமைச்சு தற்போது நடத்தி வருகின்றது.

சென்ற 6 ஆம் திகதி ஆரம்பமான இப்பயிற்சி வகுப்புக்கள் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வரை நடைபெறும்.

இப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்பவருக்கு அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியிருக்கிறது

அச்சுற்று நிருபத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

வகுப்பில் பங்குபற்றும் ஆசிரியர் வெள்ளை நிற உடை அணிந்து வரவேண்டும்.

நீண்டு வளர்ந்த தலைமுடி, தாடி ஆகியவற்றுடன் வரும் ஆசிரியர், வகுப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இப்படி அதில் கூறப்பட்டுள்ளது. (ஒ-எ)



### பொய்யாமொழி

குறள்:

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

பொருள்:

செயலுக்கு உரிய கருவியும் ஏற்ற காலமும் செய்யும் வகையும் செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லவன் அமைச்சன்.

### வாசகர் திருமுகம்

## செல்வா நினைவு சொற்பொழிவு தொடருமா?

அண்மைக் காலச் சூழ் நிலைகள் நிமித்தம் கடந்த சில வருடங்களாகத் தடைப்பட்டுப் போயிருக்கும் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகளின் தொடர் இவ்வாண்டில் இருந்தாவது தொடரப்படுமா? என்று அக்கறையுள்ள வட்டாரங்கள் கரிசனையுடன் விசாரிக்கின்றன

தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்து நடாத்துவதற்கு தந்தை செல்வா அறங்காவல் குழுவினரே பொறுப்புடையவர்கள்.

யாழ் பொது நூலகத்தை அடுத்திருக்கும் தந்தை செல்வா நினைவாலயத்தின் பராமரிப்பையும் மேற்படி குழுவினரே பொறுப்பேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 31-03-88 ஆம் திகதி தந்தை செல்வாவின் 90 ஆவது பிறந்ததினம் நினைவு கூரப்படாமையே மேற்படி வினா எழுப்பப்படக் காரணமாகும்

தந்தை செல்வாவின் பதினொராவது மறைவு தினம் ஏப்பிரல் 26 ஆம் திகதி வருவதால் அத்தினத்தையும் தவறவிடாது தற்காக்கும் நோக்குடனேயே இவ்வினா எழுப்பப்படுகிறதேயன்றி எவர் மீதும் குறை சுமத்துவதற்காக அல்ல என்பதைத் தயவாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரும்பராய் — ஆனந்தன்

## சிகரெட்டில் கதிரியக்கத் துகள்கள்

### ஆய்வு ஒன்றில் கண்டுபிடிப்பு

கொழும்பு ஏப் 17

சிகரெட்டில் கதிரியக்கத் துகள்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு ஒன்றில் இது கண்டுபிடிக்கப்பட்டதாக வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்தார்

முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டபிள்யு ஏ கருணாரத்ன இது பற்றித் தெரிவித்ததாவது:

ஒன்றரை பைக்கட் சிகரெட்டுக்களை ஒரு நாளில் புகைப்பவரின் சுவாசப்பையை கதிரியக்கச் சக்தி தாக்குகின்றது.

300 மார்பு எக்ஸ்ரேக்களின்போது ஏற்படும் கதிரியக்கத்தாக்கலுக்கு இது சமமாகும் இது சுவாசப்பையில் புற்றுநோய் ஏற்பட வழிவகுக்கின்றது.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் சுவாசப்பை புற்றுநோயில் அரைப்பங்கு கதிரியக்கத்தினால் ஏற்படுகின்றது

சிகரெட்டில் கதிரியக்கச் சக்தி இருப்பதற்குக் காரணம் சிகரெட் பயிர்ச் செய்கைக்கு உரம் பாவிப்பதேஆகும்

இப்படி அவர் சொன்னார். (இ-எ)

### வைத்தியப்பட்டம்

கொழும்பு, ஏப் 17

வட கொழும்பு தனியார் வைத்திய கல்லூரி வைத்தியப் பட்டம் வழங்கும் ஒரு சுதந்திர நிறுவனமாக இயங்கும்.

தற்போது இந்த வைத்தியக் கல்லூரியை, வைத்திய அதிகாரிகள் கல்லூரி நிர்வகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"மில்க்வைற் செய்தி இதழ்- 143"

மில்க்வைற் நீலசேப் 10. அல்லது
மில்க்வைற் பார் சேப் 2 அல்லது
சுப்பர் மில்க்வைற் சோப்
மேலுறைகள் 2 அனுப்பி
"மங்களகரமான கார்த்திகை" என்ற
மில்க்வைற் செய்தியை பெறுக்கொள்ளுங்கள்

மில்க்வைற் யாழ்ப்பாணம்



# உதயன்

17 - 04 - 1988 ஞாயிற்றுக்கிழமை



"காலம் பெறுமதியானது"

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



V. J. S. Express

பிரயாணிகளுக்கு ஒரு
முக்கிய அறிவித்தல்

இன்றும் நாளையும்
(ஞாயிறும், திங்களும்) எமது
யாழ் - கொழும்பு இரண்டாவது பஸ்
நண்பகல் 12-30 மணிக்கே
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்
படும் என்பதை அறியத் தருகிறோம்.

V. J. S. EXPRESS
113, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



SPOKEN ENGLISH
with
GRAMMAR
by
S. B IYAR
ஆரம்பம்
20 - 04 - 88
தொடர்பு கொள்க:
12, வைமன் வீதி, நல்லூர் (2524)



மிது வீடியோ
மூவிஸாரின்
இன்றைய வெளியீடுகள்
O ரகுவரன் மாதுரி
நடித்த
✯ ஒரு மனிதனின்கதை ✯
(ஒரிஜினல்)
✯ புஷ்பராகம் ✯
(புதிய ஒலி ஒளி)
அடுத்து வருகின்றார்கள்
O ரஜனிகாந்த, பிரபு
நடித்த
✯ குரு சிஷ்யன் ✯
மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
யாழநகரில்
சதீஸ் றெக்கோடிங் ஸ்ருடியோ



உடன் தேவை
பிஸ்சிங் ரேலர்
அரேபியன் கடல் (துபாய்)
சம்பளம் 400 US டொலர் (12,000/-)
இம்மாதம் பிரயாணம்
வயதெல்லை 40க்குள் பாஸ்போட் 5 படங்களுடன்
மற்றும் விடயங்களுக்கு நேரில் சந்திக்கவும்
யாழ்நகரில்
18- 4 88க்கு முன்
128/B மானிப்பாய் ரோட்
யாழ்ப்பாணம.
கொழும்பில்
பெற்றுன்ஸ் போட்டர்ஸ்
61 கிவிச் ரோட்,
கொழும்பு -11
ரெலிபோன் நம்பர்: 36937


# முஸ்லிம்கள், சிங்களவரின் சேதங்களை மதிப்பிடக் குழு

## முஸ்லிம் நாடுகளில் இருந்து வருகிறது

கொழும்பு, ஏப். 17

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற அசம்பாவிதங்களினால் முஸ்லிம் மக்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்ய பஹ்ரைன், அபுதாபி, மற்றும் வளைகுடா நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளார்கள்.

சென்னையில் இருந்து கொழும்பு வந்திருந்த முஸ்லிம் பெரியார் பழனி பாபா என்றழைக்கப்படும் முகமது அலி அஹ்மத் இத் தகவலை வெளியிட்டார்.

இதற்கு முன்னர் பழனி பாபா, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது முஸ்லிம்களின் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார் என்று பழனிபாபா சொன்னார்.

பழனிபாபா மேலும் தகவல் தருகையில்,

"கிழக்கு மாகாண அகதிகளுக்கு வழங்க பல லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளை சவூதி அரேபியாவில் உள்ள முஸ்லிம் இளைஞர் சம்மேளனம் அனுப்பி வைக்கும்" என்றுசொன்னார்.

பழனிபாபா விரைவில் கல்முனை சென்று அகதிகளுக்கு உணவுப் பொருள்களை வழங்குவார் என்றும் அறிவிக்கப்படுகின்றது. [ஒ-எ]

# வவுனியாவில் நேற்று படையினர் சோதனை

யாழ்ப்பாணம், ஏப் 17

வவுனியாப் பகுதியில் நேற்று இந்திய அமைதிப்படையினரும் ஸ்ரீலங்காப்படையினரும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியாப் பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதத்தை அடுத்தே இத் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று வவுனியா நகரம் வழமைக்குத் திரும்பி இருந்த போதிலும் படையினரின் சோதனை நடவடிக்கைகள் சற்று வழமையைவிட அதிகரித்துஇருந்தன.

போக்குவரத்துகளும் வழமைபோல் நடைபெற்றன. (ஒ 10)

# நேற்று சின்னக்கடை சுற்றிவளைப்பு

நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரையிலான இரு மணித்தியாலங்கள் சின்னக்கடை, பாட்டீன் வீதி, வேம்படி வீதி, 2 ஆம், 3 ஆம், குறுக்கு வீதிகள், பிரதான வீதி, தொடர்மடி வீடுகள் ஆகிய பகுதிகளில் இந்திய அமைதிப்படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

வீடுகளில் தங்கியிருந்த இளவயதினர், வீதிகளில் நடமாடியவர்கள் அந்தந்தப் பகுதிகளில் ஒன்று சேர்க்கப்பட்டு அடையாளக் கார்ட்டுகள் பரிசோதிக்கப்பட்டதுடன் முகமூடிகள் முன்பாகவும் நிறுத்தப்பட்டனர்

(ஒ-51)

## யாழ்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்று நிருபங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(அ-க)

## அமைதிப்படை அதிகாரி சென்று பார்த்தார்

சென்னை, ஏப். 17

திருகோணமலை சிவன் கோவிலடியில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் திருமதி சுசிலா கணேசனை இந்திய அமைதிப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்றுச் சென்று பார்த்தார்.

உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி அவர் திருமதி கணேசனைக் கேட்டுக்கொண்டார்.

## மன்சூருக்கு...

(1-ஆம்பக்கத்தொடர்ச்சி)

றம் செய்யப்பட்டார் என்றும் அறிய வந்தது.

எனினும் அவரது இடத்துக்கு புதிய கல்விப் பணிப்பாளராக யார் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறித்து எவ்வித அறிவிப்பும் இல்லையாம்

பதியவரின் பெயரும் அறிவிக்கப்பட்டே இவ்வாறான இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவது வழக்கம் எனவும் சொல்லப்படுகிறது.

(அ-க-5)

## தமிழர் . : .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

இடம்பெற்றவர்கள் விவரம் வருமாறு:-

1 எம். எம். முஸ்தபா (முன்னாள் நிந்தவூர் எம். பி).

2 எம். சி. அகமது [முன்னாள் கல்முனை எம். பி]

3 டாக்டர் ஜலால்தீன் [முன்னாள் பொத்துவில் எம் பி]

4 எ. டபிள்யு எம். அமீர் [சர்வதேச இஸ்லாமியநிலையத் தலைவர்].

5. எம். ஐ. எம். மொஹிதீன். [முன்னணிப் பொதுச் செயலாளர்].

6 எல். ஜவாத் [உதவிச் செயலாளர்] [இ-எ]

## புலிகளுக்கு முக்கிய...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

முன்னணி கருதுகின்றது

இடைக்கால நிர்வாகத்தில் ஆட்சி புரியக்கூடிய பங்கு விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை எம் முன்னணி ஆதரிப்பதாக சென்னையில் விடுதலைப்புலிகளுக்குத் தெரிவிப்போம்.

விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவோம். ஒப்பந்தத்தை ஆதரிக்கும்படி அவர்களைக் கோருவோம்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் வெற்றியடைந்தால் விடுதலைப் புலிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுடன் இணைந்து 'பெரிய அணி' ஒன்றை அமைப்பது பற்றி எமது முன்னணி யோசித்து வருகிறது.

வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் 'பாரம்பரிய தாயகத்தை' இரண்டு மாகாணங்களையும் இணைப்பதன் மூலமே காப்பாற்ற முடியும் என்று நாம் கருதுகிறோம்.

இப்படி ஜனாப் மொஹிதீன் தெரிவித்தார்

(ஒ-எ)

## பார்வை . .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

மணி முதல் ஒரு மணி வரையும், மாலை ஐந்து மணி முதல் ஆறு மணி வரையும் பார்வையாளர்கள் நோயாளர்களைப் பார்வையிடலாம்.

தற்பொழுது யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாகவே இப்புதிய நடைமுறைகள் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன. (ஒ-10)

# கிளிநொச்சியில் ஒரே இரவில் இரண்டு கொள்ளைகள்

கிளிநொச்சி. ஏப்.7

கிளிநொச்சி ஜெயந்தி நகர் கிராமத்தில் ஒரே இரவில் இரண்டு வீடுகளில் நகைகளும் பணமுமாக சுமார் ஒன்றேகால் லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை திரு ஏ. அந்தோனிப்பிள்ளை என்பவரது வீட்டினுள் ஆயுதபாணிகளாக நுழைந்தவர்கள் அவ் வீட்டில் இருந்தவர்களைப் பயமுறுத்தி மொத்தம் சுமார் 75 ரூபா பெறுமதிக்கு நகை, பணம் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இதே இடத்தில் உள்ள திரு கு. கோபாலகிருஷ்ணபிள்ளை என்பவரது வீட்டினுள் ஆயுதபாணிகளாக நுழைந்தவர்கள் அவ் வீட்டில் இருந்து மொத்தம் சுமார் 37 ஆயிரம் பெறுமதிக்கு நகை, பணம், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி என்பனவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த சில தினங்களின் முன் கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரது சைக்கிள் ஒன்று மாயமாக மறைந்து விட்டதாகக் கூறப்பட்டது.

[ஒ-76]


எமது
புதிய வெளியீடுகள்

பாண்டியன் - ராதா - சீதா
"அர்த்தங்கள் ஆயிரம்"
ரகுவரன் - மாதுரி
"ஒரு மனிதனின் கதை"
விஜயன் - மேனகா
"கண்ணாடி"
பிரபாகர் - அம்பிகா
"கருடரேகை"
சிவாஜி - பத்மினி
"இருமலர்கள்"
சிவாஜி - பத்மினி
"புதையல்"

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.


## ஓராண்டு நினைவஞ்சலி



மலையக
மண்ணில்:
10 - 6 - 1960

●

அரக்கர்களின்
கையில்
13 - 4 - 1987

Dr. கனகசபாபதியின் அன்பு மகன்
Dr. பெஞ்சமின் ( ரவி )

● 13 - 4 - 1987ல்வீரமரணமடைந்தார் ●

எம் இனத்தின் விடிவுக்காக நீர் உம்மை அர்ப்பணித்த தியாகத்திற்கு விலை உண்டு.

காலன் அவன் விதி உன்னை மட்டும் அழைத்த மாயமென்ன?

எமது இதயம் வினாடிக்கு வினாடி வேதனைப்படுகிறது.

உன் பிரிவால் துயருறும்:

க. தனலட்சுமி [அம்மா]
V. சரஸ்வதிதேவி, [மாமா அன்ரி]
V கிரோன்மணி, நித்தியானந்தராஜா,
நவரட்ணராஜா, கனகசபை கண்ணன்,
கேதீஸ்வரி, திலிப்குமார்,
கோம்லேஸ்வரி, சாந்தி.
16 கச்சேரி வீதி
கண்டி.

(2567)

## நீத்தார் பட்டியல்

### ஜோண் கனகரட்னம்

ஜோண் கனகரட்னம் 16-4-88 இல் காலமானார். இவர் ரோஸ்மலரின் அன்புக்கணவரும், நிரா, பபி, சுவேந்திரா, ரூபா ஆகியோரின் அருமைத் தந்தையும் முத்துரட்ணனத்தினின் [மின் பொறியியலாளர், இ. மி. ச யாழ். பிரதேசம்) அன்பு மாமனுமாவார். பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று ஞாயிறு 4 மணிக்கு 364 பிரதான வீதியில் இருந்து யாழ். மரியாள் பேராலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

[2827] - குடும்பத்தினர்,

### திருமதி ஜெயா அல்பேட்

கரம்பனைச் சேர்ந்த திருமதி ஜெயா அல்பேட் 14-04-88 வியாழக்கிழமை புத்தளத்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற S. B. அல்பேட் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற J. S. B. செல்லத்துரை, திருமதி செல்லத்துரையின் அன்பு மகளும் சனக்குமார் [Italy] வதனா (U K ) டியாந்தி. (புத்தளம்) மெலானி [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும் இல்டா (Italy), தேவராஜ் [U K], தேவகுலேந்திரன் [Bank of Ceylon மதுரங்குளி,.] நேசன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின்பூதவுடல் இன்றுஞாயிற்றுக்கிழமை (17-04-88) புத்தளத்தில் 30,SPILL R AD இல் உள்ள இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொளுள்கின்றோம்.

தகவல்:
திருமதி செல்லத்துரை (தாய்)
56. சப்பல வீதி.
யாழ்ப்பாணம்

[2576]

### Dr. திரு. கா. இராமநாதன்

சுன்னாகம் ஐயனார் வீதி பிருந்தாவனைச் சேர்ந்த இளைப்பாறிய டாக்டர் திரு. காசிப்பிள்ளை இராமநாதன் 12 - 4 - 88 அன்று காலமானார். அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நந்தகுமார் (I. I. E T.) இந்தியா), கணேஸ்குமார் (மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத் தந்தையும். இலங்கநாதன், கண்மணி, சிவப்பிரகாசம். மகேஸ்வரன் மணி, நாகேந்திரன், சிவமணி ஆகியோரின் சகோதரனும், நகேஸ்வரி இரத்தினசபாபதி. மகேஸ்வரி நமசிவாயம், நாகேந்திரன், சிவப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-4 88 ஞாயிற்றுக்கிழமை இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி R. இராமநாதன்
பிரிந்தாபன்.
ஐயனார் வீதி,
சுன்னாகம்.

(2828)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17-4-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd 292/2, Navalar Road Jaffna on Sunday, 17th April 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org